## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

இந்த மருந்தை எடுப்பதற்கு முன்னால்,

- எந்த மருந்தாவது உங்களுக்கு ஒவ்வாமை ஏற்படுத்துமா என்பதை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.
- நீங்கள் வேறு மருந்துகள் எடுத்து வருகிறீர்களா என்பதை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள். குறிப்பாக, மனஅழுத்தம், இதய நோய், இரத்தக் கொதிப்பு மற்றும் சளி மருந்துகள், தசை தளர்த்திகள், தூக்க மாத்திரைகள்.
- கல்லீரல் நோய்கள் உங்களைத் தற்போது, அல்லது இதற்கு முன்பு பாதித்துள்ளதா என்பதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.
- இந்த மருந்து சிலருக்கு அதிக தூக்கத்தையும் மந்த நிலையையும் உண்டாக்கலாம். முதல்வேளை மருந்துக்குப்பின் 12-24 மணி நேரத்திற்கு, அல்லது மருந்தின் அளவு கூட்டப்படும்போது, வாகனம் ஓட்டாதீர்கள் மற்றும் இயந்திரங்கள் இயக்காதீர்கள்.

சிலருக்கு தலைச்சுற்றல், தலைக்கிறக்கம் அல்லது திடீர் மயக்கம் ஏற்படலாம், குறிப்பாக படுத்துவிட்டு அல்லது உட்கார்ந்துவிட்டு எழும்போது. இந்தப் பக்க-விளைவுகள் மருந்தை நீங்கள் முதல்முதலாக எடுக்கும்போது நிகழலாம். எனவே, முதல்வேளை மருந்தை இரவில் எடுத்துக் கொள்வது நல்லது. இப்பக்க-விளைவுகள் இருந்தால், அவை நீங்கும்வரை படுத்திருந்துவிட்டு, மிக மெதுவாக எழுந்திரியுங்கள்.

## மருந்தை நான் எப்படி **வைத்திருக்க** வேண்டும்?

மருந்தை காற்று புகாத டப்பாவில் வைத்திருங்கள். அதன்மீது வெப்பமோ சூரிய ஒளியோ படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

Ministry of Health

National Healthcare Group

SingHealth



# நோயாளி தகவல் கையேடு



# சுக்கியன் உறுப்பு – தசை தளர்த்திகள்

ப்ரசோஸின் • டெரசோஸின் • அல்ஃபுசோஸின்

## Prostate-related Relaxants

Prazosin • Terazosin • Alfuzosin

T59R0

## உங்கள் மருந்து பற்றிய தகவல்

ஆண்களுக்கு இருக்கும் சுக்கியன் உறுப்பின் (prostate) தீங்கில்லாத பெருக்கத்திற்கு (சுக்கியன் சுரப்பி அளவில் பெரிதாகுதல்) சிகிச்சை அளிக்க இந்த மருந்து பயன்படுத்தப்படுகிறது.

இந்த மருந்தை வேறு சில நோய்களுக்கும் பயன்படுத்தலாம்; மேல் விவரங்களுக்கு, உங்கள் மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் கேட்கவும்.

| மருந்து | செயல் |
|---|---|
| ப்ரசோஸின் (மினிபிரஸ்-Minipress®)<br>டெரசோஸின் (ஹைட்ரின்- Hytrin®)<br>அல்ஃபுசோஸின் (க்சாட்ரால்-Xatral®) | இம்மருந்துகள் சிறுநீர்ப்பை மற்றும் சுக்கியன் உறுப்பின் தசைகளைத் தளர்த்துகின்றன. இவை மாத்திரை வடிவத்தில் கிடைக்கின்றன. |

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

மருந்தை மருத்துவர் கூறியபடியே உட்கொள்ள வேண்டும். மருந்தைச் சரியாக எடுக்கத் தெரியவில்லை என்றால், உங்கள் மருந்தாளரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

மருந்தை இரவில் உறங்கச் செல்வதற்கு முன் உட்கொள்ள வேண்டும். மருத்துவரைக் கேட்காமல் மருந்தை ஒருபோதும் நிறுத்தக் கூடாது.

## மருந்து உட்கொள்ள **நான் மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளையிலிருந்து வழக்கம்போல் தொடருங்கள். முதல் வேளையில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு உட்கொள்ளாதீர்கள்.



நோயாளி தகவல் கையேடு I **சுக்கியன் உறுப்பு – தசை தளர்த்திகள்**

## இம்மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை?

பக்க-விளைவுகள் பொதுவாக இருக்காது என்றாலும், அவை ஏற்படக்கூடிய சாத்தியமும் உள்ளது. பக்க-விளைவுகள் முதலில் இருந்தாலும், மருந்துக்கு உடல் பழகிக் கொண்டுவரும்போது அவை பொதுவாக மறைந்துவிடும். எனினும், கீழ்க்காணும் பக்க-விளைவுகள் நீடித்தாலோ அல்லது தொந்தரவு கொடுத்தாலோ, மருத்துவரைப் பாருங்கள்.

| மருந்து | பக்க-விளைவுகள் |
|---|---|
| ப்ரசோஸின் (மினிபிரஸ்-Minipress®)<br>டெரசோஸின் (ஹைட்ரின்- Hytrin®)<br>அல்ஃபுசோஸின் (க்சாட்ரால்-Xatral®) | பதற்றம்<br>தலைச்சுற்றல்<br>தலைவலி<br>களைப்பு<br>வயிற்றுக் கோளாறு<br>அடிக்கடி சிறுநீர் கழித்தல் |

இவை தவிர, இந்த மருந்து எடுக்கும்போது, வழக்கத்திற்கு மாறான வேறு பக்க-விளைவுகள் ஏற்பட்டாலும் மருத்துவரைப் பாருங்கள்

மருந்து எடுத்தவுடன் பின்வரும் அறிகுறிகள் தோன்றினால், உடனே மருத்துவரை அழையுங்கள்:

- சுவாசிப்பதில் சிரமம்
- முறையற்ற இருதயத்துடிப்பு
- இருதயத்துடிப்பு வேகமடைதல்
- நெஞ்சு வலி